## 50 ஆயிரம் மரக்கன்று நட்டு சாதனை

# 'ரியல் ஹீரோ' விருது பெறும் கோவை அரசு பஸ் கண்டக்டர்

கோவை, ஆக. 17–

கோவை மருதமலையில் இருந்து நஞ்சுண்டாபுரம் செல்லும் எஸ்.26 அரசு டவுன் பஸ்சில் கண்டக்டராக பணிபுரிந்து வருபவர் மாரிமுத்து யோகனாதன் (வயது 42). சுற்றுப்புற சூழல் ஆர்வலர். மரம் வளர்ப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். கடந்த 15 வருடமாக மரம் வளர்ப்பதை பொது மக்களிடையே ஊக்கப்படுத்தி வருகிறார்.

இதுவரை 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை களை தன்னுடைய சொந்த செலவில் பல்வேறு இடங்களில் நட்டுள்ளார். இவரை பற்றி தகவல் அறிந்த சி.என்.என். – ஐ.பி.என். விருது குழுவினர் 5 நாட்கள் இவருக்கு தெரியாமலேயே இவரது நடவடிக்கைகளை கண்காணித்தனர்.

### விருது

இவர் பஸ் பயணத்தின் போது பள்ளி மாணவ–மாணவிகளிடம் மரக்கன்றுகள் நடுவதின் நன்மைகள் குறித்து விளக்கினார். ஓய்வு நேரங்களில் புதிதாக மரங்கள் நடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். இதையடுத்து மாரிமுத்து யோகனாதன் ஒரு உண்மையான சுற்று சூழல் ஆர்வலர் என்பதை விருது குழுவினர் உணர்ந்தனர்.



மாரிமுத்து யோகனாதன்

இதைத் தொடர்ந்து சுற்று சூழல் துறைக்கான 'ரியல் ஹீரோ' விருதுக்கு மாரிமுத்து யோகனாதன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு இன்று மாலை மும்பையில் நடக்கும் விழா ஒன்றில் விருது வழங்கப்படுகிறது. இதற்காக மாரிமுத்து யோகநாதன் விமானம் மூலம் மும்பை சென்றார்.

சமூக ஆர்வலர்கள் மத்தியில் நன்கு அறிமுகமான யோகநாதன் இதுவரை 14 விருதுகள் பெற்றுள்ளார். கடந்த 2008–ம் ஆண்டு இயற்கை போராளி விருது பெற்றது குறிப்பிடத்தக்கது.